பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 சித்திரை 28 ஞாயிற்றுக்கிழமை (10-05-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 164

# தமிழ்நாடு சட்ட மன்றத்தை கலைக்கும் நிலை வரலாம்!

## விஷ சாராயம்: 260 பேர் பலி

புதுடில்லி, மே 10

இந்தியாவின் ஒரிஸ்ஸா மாநிலத்தில் விஷசாராயம் அருந்தியதில் 260 பேர் உயிரிழந்துள்ளனர், மேலும் 300 பேர் வரையில் மிகவும் ஆபத்தான நிலையில் உள்ளனர்.

கட்டாக் நகரில் இடம் பெற்ற இந்தச் சம்பவத்தில் மேலும் பலர் உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது. (உ-10)

## உயர் நீதிமன்றத்துடனான மோதல் பூதாகரமாகிறது

சென்னை, மே 10

**தமிழக சட்டசபைக்கும் இந்திய உயர் நீதிமன்றத்திற்கும் இடையிலான மோதல் பூதாகரமாகி வருகிறது. இந்நிலை தொடர்ந்தால் தமிழக சட்டசபையைக் கலைக்கும் நிலை உருவாகுமென சட்ட மற்றும் அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டிருக்கின்றனர்.**

தமிழக சட்டசபைத் தீர்மானத்தின்படி, இரு பத்திரிகையாளர்களைக் கைது செய்து, சட்ட சபையின் முன்னால் ஆஜர் செய்யும்படி தமிழகப் பொலீஸாருக்கு தமிழக சபாநாயகர் உத்தரவிட்டதும்—

இதனை ஆட்சேபித்து தாக்கல் செய்யப்பட்ட மனுக்களின் அடிப்படையில் அந்த வாரண்ட் உத்தரவுகளுக்கு தடை விதித்து உயர்நீதிமன்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## தமிழக இழுபறி:

## தமது உத்தரவு செல்லும் என்கிறார் சபாநாயகர்

சென்னை, மே 10

இரண்டு பத்திரிகையாளர்களைக் கைது செய்யக்கூடாது என்று உயர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளபோதிலும், அவர்களைக் கைது செய்ய வேண்டும் என்று தாம் பிறப்பித்த 'பிடி வாரண்ட்' இன்னமும் செல்லுபடியாகும் என தமிழக சட்ட சபை சபாநாயகர் சேடப்பட்டி முத்தையா நேற்று பத்திரிகையாளர்களுக்கு விடுத்த அறிக்கையில் கூறியுள்ளார்.

இரு பத்திரிகையாளர்களும் பேரவை உரிமை மீறலுக்காக கைது செய்யப்பட்டு, அவையின் கூண்டில் ஏற்றப்பட வேண்டும் என்ற தீர்மானமும் தாம் விடுத்த ஆணைகளும் அப்படியே உள்ளன என்று அவர் தெரிவித்தார்.

தமிழ்நாடு சட்ட சபை வெளி அமைப்புகளின் எவ்வித தலையீட்டுக்கும் அப்பாற்பட்டு இயங்கும் தனித் தன்மையையும் இறையாண்மையையும் பெற்றுள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கு ஏற்றாற்போல் எந்த நீதிமன்றமும் அனுப்பும் நோட்டீஸ்களையும் பேரவைத் தலைவரான தாமோ, உரிமைக் குழுவோ அல்லது பேரவைச் செயலாளரோ ஏற்றுக் கொண்டு பதிலளிக்கப் போவதில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். [உ-10]

## இந்திய ஜனாதிபதியை உடன் தலையிட கோரிக்கை

சென்னை, மே 10

''தமிழக அரசு, பத்திரிகைச் சுதந்திரத்தை பறிக்கிறது. ஆகவே உடனடியாகத் தலையிட்டு பத்திரிகைச் சுதந்திரத்தைக் காப்பாற்றுங்கள்.''

—இவ்வாறு ஜனாதிபதி வெங்கட்ராமனிடம் தமிழகத்தில் உள்ள நான்கு பத்திரிகையாளர் சங்கங்கள் கூட்டாக வேண்டியிருக்கின்றன.

வெளிப்படையாக தன்னையும் தனது ஆட்சியையும் குறை கூறும் பத்திரிகைகளை மற்றும் பத்திரிகையாளர்களைத் தண்டிக்குமாறு முதல்வர் ஜெயலலிதா தூண்டி வருகின்றார் என்றும் அச்சங்கங்கள் பிரதமரிடம் முறையிட்டிருக்கின்றன. [உ-5]

## கொக்குத்தொடுவாயில் சிங்கள மீனவர் குடியேற்றம்

மணலாறு, கொக்குத்தொடுவாய் கடற்கரைப் பிரதேசத்தில் புதிய பல கிராமங்கள் அமைக்கப்பட்டு அப்பகுதிகளில் சிங்கள மீனவர்கள் குடியமர்த்தப்பட்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த இரு வாரங்களில் சுமார் இருநூறுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் அங்கு குடியமர்த்தப்பட்டுள்ளன என்றும் தெரியவருகிறது.

கொக்கிளாயில் இருந்து கொக்குத்தொடுவாயை நோக்கிய கடற்கரைப் பிரதேசத்தில் 128 சிங்கள குடும்பங்கள் சகல வசதிகளுடனும் ஏற்கனவே அங்கு குடியமர்த்தப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இதேசமயம்—

மணலாறின் உட்பகுதியில் உள்ள விவசாய நிலங்களிலும் சிங்களவர்கள் குடியமர்த்தப்பட்டு வருகின்றனர் என்றும் அறியவருகிறது. [ஒ-5]

## முச்சந்தி முரளி



அப்ப...... சேடப்பட்டியார் கிணறு வெட்ட பூதம் கிளம்பப் போகுது எண்டு சொல்லுங்கோ...!

## சந்தை விலைகள் உள்ளே......

உற்பத்தியாளர்கள், பாவனையாளர்கள், தொலைவு இடங்களுக்குச் சென்று பொருள்களை வாங்கி விற்கும் சிறு வியாபாரிகள் ஆகியோரின் நன்மை கருதி—

முக்கிய உணவுப் பொருள்களின் சந்தை விலைகள் வாரத்தில் இரு நாட்கள் உதயனில் வெளியிடப்படும். ஞாயிறு, புதன்கிழமைகளில் அவை வெளிவரும்.

குடாநாட்டின் நான்கு திசைகளிலும் உள்ள பிரதான சந்தைகளில் இருந்து விலைகள் சேகரிக்கப்படுகின்றன.

உள்ளே 5 ஆம் பக்கத்தைப் பாருங்கள்⟶

## தொடர்ச்சியாக வேட்டுக்கள்

சுழிபுரம், மே 10

காரைநகர் படையினர் நேற்றுக் காலை 8 மணி தொடக்கம் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்த வண்ணம் இருந்தனர்.

கடல் பக்கமாக பீரங்கி முழக்கங்களும் கேட்டன. (ஒ-28)

## இருதயபுரத்தில் வீரச்செயல்:

## 3 கிரனேட்டுகளை வீசிவிட்டு 'சயனைட்' அருந்திவீரமரணம்

யாழ்ப்பாணம், மே 10

மட்டக்களப்பு, இருதயபுரத்தில் கடந்த 4 ஆம் திகதி விடுதலைப் புலிகளின் ஆதரவாளர் ஒருவர் பொலீஸார் மீதும், படையினர் மீதும் கிரனேட் தாக்குதல்களை நடத்திவிட்டு, இறுதியில் சயனைட் உட்கொண்டு வீரமரணம் அடைந்தார்.

லெப்டினன்ட் பிரபாகரன் என அழைக்கப்படும் மட்டக்களப்பைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை என்பவரே வீரமரணமடைந்தவர் ஆவார்.

இயக்க வேலைகள் காரணமாக இவர் இருதயபுரம் சென்றிருந்ததை அறிந்து கொண்ட இராணுவ உளவுப் படையினர் பதுங்கியிருந்து அவரைத் தாக்க முற்பட்டனர். அச்சமயம் உளவுப் படையினர் மீது கிரனேட் ஒன்றை வீசி விட்டு அவர் தப்பிக் கொண்டார்.

அதை அடுத்து பெரும் எண்ணிக்கையான பொலீ

( 6ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாப் பகுதியில் விமானக் குண்டு வீச்சு

யாழ்ப்பாணம், மே 10

வவுனியா, தவசிக்குளத்தில் நேற்றுக் காலை ஸ்ரீ லங்கா விமானப் படை விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தின.

இரண்டு பொம்மர்களும், ஒரு அவ்ரோ விமானமும் அப்பகுதியில் கடும் தாக்குதலை நடத்தின. அதனால் இரு வீடுகள் சேதமடைந்தன என்றும் கால்நடைகள் சிலவும் பலியாகின என்றும் தெரிவிக்கப்பட்டது.

விமானத் தாக்குதலைத் தொடர்ந்து அப்பகுதிக்கு வந்த ஹெலி ஒன்று 50 கலிபர் தாக்குதலை நடத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-5)

## கறுப்புப் பூனைகள் விடயம் சர்வதேச நீதிமன்றுக்கு?

கொழும்பு, மே 10

பிரதிப் பொலீஸ்மா அதிபர் பிரேமதாஸ உடுகம்பொல தெரிவித்த குற்றச் சாட்டுகள் பற்றி நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்த அரசு மறுக்குமேயானால் இந்த விடயத்தை சர்வதேச நீதிமன்றத்துக்கு எடுத்துச் செல்வதுபற்றி எதிர்க்கட்சிகள் ஆலோசனை நடத்தி வருகின்றன.

சிங்கள வாரப் பத்திரிகையான ''ராவய'' இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

அரசு சார்பான கறுப்புப் பூனைகள் படை ஸ்ரீ. ல. சு. கட்சி ஆதரவாளர்கள் பலரைக் கொலை செய்ததாக உடுகம்பொல தெரிவித்த குற்றச்சாட்டுகள் தற்போது பெரும் சர்ச்சையைக் கிளப்பியிருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை—

அரசு பதவி விலக வேண்டும் என்று கோரி நாடெங்கும் எதிர்ப்புக் கூட்டங்களை நடத்த எதிர்க்கட்சிகளின் கூட்டு முன்னணி ஏற்பாடு செய்து வருகிறது. இந்த வரிசையில் முதலாவது கூட்டம் இம்மாதம் 25 ஆம் திகதி கண்டியில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது.

## பிரேமா வருவதற்கு முதல் நாள்

## அக்கரைப்பற்றில் கண்ணி! 2 கொமாண்டோக்கள் பலி!!

கொழும்பு, மே 10

அக்கரைப்பற்றில் நேற்று இடம்பெற்ற பெரும் நிலக்கண்ணி வெடிச் சம்பவத்தில் இரு பொலிஸ் கொமாண்டோக்கள் உயிரிழந்தனர். ஐந்து பேர் படுகாயமுற்றனர்.

ஜனாதிபதி பிரேமதாஸா இன்று அக்கரைப்பற்று பகுதிக்கு விஜயம் செய்ய இருக்கையில் நேற்று இச்சம்பவம் இடம்பெற்றது.

அக்கரைப்பற்றில் புதிய பாடசாலை ஒன்றைத் திறந்து வைக்கும் நிகழ்ச்சியில் பங்குபற்றுவதற்காக ஜனாதிபதி பிரேமதாஸா அங்கு இன்று விஜயம் செய்வார் என அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் அங்கு நேற்று நகரப் பகுதியில் ரோந்தில் ஈடுபட்டிருந்த பொலிஸ் கமாண்டோக்களின் வாகனம் ஒன்று நிலக்கண்ணி வெடித் தாக்குதலுக்கு இலக்கானது.

விடுதலைப் புலிகள் நடத்திய இத்தாக்குதலினால் வாகனம் நாசமானது. சேதம் பற்றிய மேலதிக விவரங்கள் செய்தி அச்சுக்குப் போகும் வரைக் கிடைக்கவில்லை. [உ-5]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். ஆயர் மேதகு;

# கலாநிதி - வ. தியோகுப்பிள்ளை ஆண்டகையின்

# பவள, பொன், வெள்ளி விழாச் சிறப்பு அங்கம்

## எவருக்கும் கிட்டாத அதி உயர் நிகழ்வு

அருட் பெருந்தகையீர்!

ஆயர், ஆண்டகை தியோகுப்பிள்ளை அவர்களுக்கு மூன்று பெரு விழாக்கள் ஒருங்கே நிகழவிருப்பது அறிந்து பேருவகை எய்துகிறோம். ஆயர் அவர்களின் எழுபத்தைந்தாவது வயதுக்கான பவள விழாவும், குருப் பட்டம் பெற்று ஐம்பது வருட சேவை யாற்றியதுக்கான பொன் விழாவும், ஆயர் என்ற பெரு நிலை எய்திய இருபத்தைந்து வரு - அரும்பணி புரிந்ததற்கான வெள்ளிவிழாவும் நடைபெறுவது எல்லோருக்கும் கிட்டாத அதி உயர் நிகழ்வுகளெனில் மிகையாகாது.

ஆண்டவன் ஆயருக்கு ஆரோக்கிய பூர்த்தியும், ஆயுள் விருத்தியும் மற்றும் எல்லா நலன்களையும் அளித்தருளும் வண்ணம், உளமாரப் பிரார்த்தித்து எமது நல்லாசிகளை வழங்குகின்றோம்.

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய-ஸ்வாமிகள்
(நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்)

## பாராட்டும் மதிப்பும் பெற்ற அடிகளார்

வணக்கத்துக்குரிய தியோகுப்பிள்ளை ஆண்டகை யாழ். மறை மாவட்டத்தின் பேராயர் ஆவார். அன்னாரின் சேவைகள் இலகுவில் மறக்க முடியாதவை. மதகுருவாய் இருந்து மக்கள் நலனுக்காக உழைத்த இப்பெரியார் மக்களால் பாராட்டத்தக்கவர். இவரின் சேவை நலன்களைப் பாராட்டி உதயன் நாளிதழில் சிறப்பு பகுதி ஒன்று வெளியிடுவது சாலப் பொருத்தமானது.

ஆன்றவிந்தடங்கிய சான்றோரான தியோகுப்பிள்ளை ஆண்டகை கல்வி மேம்பாட்டிலும் மக்கள் நல்வாழ்விலும் கருத்துடையவராகத் திகழ்ந்தவர். நாட்டில் அமைதியும், சமாதானமும் நிலைக்கவேண்டுமெனத் தியோகுப்பிள்ளை அடிகளார் பெரும்பாடுபட்டவர். மக்கள் யாவரும் ஆண்டவன் குழந்தைகள் என்ற பெருநோக்குடையவர். அவரை அணுகிய அனைவருக்கும் ஆறுதல் அளித்து அவர் குறை தீர அரிய முயற்சிகள் செய்துள்ளார்.

தியோகுப்பிள்ளை அடிகளார் நீடிய ஆயுளும், நீண்ட புகழும் பெற்றுப் பல்லாண்டு வாழ மனமார வாழ்த்துகிறேன்.

கா. மாணிக்கவாசகர்
(யாழ். அரச அதிபரும், மாவட்ட ஆணையாளரும்)

## போதனைகளின் படி வாழ்ந்து காட்டியவர்

யாழ். ஆயர் அதி வணக்கத்துக்குரிய வ. தியோகுப்பிள்ளை ஆண்டகையின் வெள்ளி விழா [ஆயர் பதவி], பொன் விழா [குருத்துவம்], பவள விழா [வயது] சம்பந்தமாக வெளியாகும் விசேட மலரில் இலங்கையிலுள்ள பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிறுவனங்களின் சார்பில் ஓர் வாழ்த்துச் செய்தியைச் சேர்ப்பதற்கு விரும்பிய அமைப்பாளர்களுக்கு எங்கள் நன்றி.

சத்தியம், தர்மம், சாந்தி, பிரேமை, அஹிம்சை என்ற மனித விழுமியங்களை அடிப்படையாகக் கொண்டதே பகவான்



கலாநிதி - வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை

பாபாவின் போதனைகள். இயேசு கிறிஸ்து நாதரின் போதனைகளும் வேறல்ல. மற்றச்சமயங்களின் போதனைகளும் அவையே. சமகாலத்தில் இப் போதனைகளின் படி தனது வாழ்க்கையை வாழ்ந்து காட்டியவர் தியோகுப்பிள்ளை அடிகளார்.

இலங்கையின் சரித்திரத்தில் தலை சிறந்த தலைவர்களில் ஒருவராக மதிக்கப்படும் ஆயர் மேதகு தியோகுப்பிள்ளை அவர்களைப் பாராட்டிவாழ்த்துவதில் எமது ஸ்தாபனம் பெரும் மகிழ்ச்சி அடைகின்றது.

செ. சிவஞானம்
[ஸ்ரீ சத்திய சாயி சேவா நிறுவனங்களின் மத்திய இணைப்பாளர், இலங்கை[

## இறைபணிக்கு மேலும் மெருகூட்டும் விழா

யாழ் - ஆயர் அதி வணக்கத்துக்குரிய வ. தியோகுப்பிள்ளை அவர்கள் இப்புவியில் பிறந்து அதி உன்னதமான வாழ்க்கையை வாழ்ந்து எழுபத்தியைந்து வருடங்களைப் பூர்த்தி செய்து பூத்துக் குலுங்கும் இத் தினத்தில், அவர் குருத்துவம் பெற்ற பொன் விழாவும், ஆயர் பதவி ஏற்ற வெள்ளி விழாவும் ஒருங்கே இணைவது அவரின் இறைபணிக்கும் மக்கள் சேவைக்கும் மேலும் மெருகூட்டுவதாக அமைகின்றது.

இப் புனித தினத்தில் அவர் மேலும் பல்லாண்டுகள் வாழவேண்டும், மக்களுக்கு அவர் மேன்மேலும் வழிகாட்ட வேண்டும் என்று பிரார்த்திக்கும் கூட்டத்தில் ஒருவனாக இணைவதில் பெருமிதம் அடைகிறேன்.

ஆயர் அவர்கள் தமிழுக்கும், கலைக்கும் ஆற்றிவரும் சேவையை இந்நேரத்தில் நாம் போற்றாமல் இருக்க முடியாது. திருமறைக் கலாமன்றம் ஊடாக அவர்

> திருமறை தந்த ஆண்டகையின் பெருவிழாக்கள் நாளை (11-05-92) கோலாகலமாக யாழ். பேராலயத்தில் நடைபெறுவதை முன்னிட்டு இந்து சமயக் குரவர், அரச அதிபர் மற்றும் அமைப்புகளின் இயக்குநர்கள் வழங்கியுள்ள ஆசியும், வாழ்த்துக்களும்.

கலை வளர்க்கும் பாங்கு பிரமிக்கத்தக்க வகையில் அமைந்துள்ளது

கல்விமானாக, முற்போக்கு சிந்தனையாளனாக, சமூகவியலாளராக, கலைஞனாக விளங்கும் அதி வணக்கத்துக்குரிய ஆயர் அவர்களின் வாழ்க்கை கற்கப்பட வேண்டியது. விழா சிறக்க என் வாழ்த்துக்கள்.

இ. ராஜாமகேந்திரசிங்கம்
(இராமகிருஷ்ணாலயம் நுண்கலைக் கல்லூரி - இயக்குனர்)

சிறப்பு அங்கம் ஒழுங்கு
த. பரமலிங்கம்

[விளம்பர இல. சி-2303]

## 10 ஆம் மாத நினைவஞ்சலி

எமக்கு:
24-07-1947



விண்ணுக்கு:
10-07-1991

அமரர்
### இ. சண்முகநாதன்

பத்து மாதம் தான் பறந்தே - நீங்கள்
சென்றாலும், உங்கள் பசுமையான நினைவுகள்
எம்மை மறந்து தானும்
செல்லாதே யப்பா!

உங்கள் கனவுகள் நினைவுகளை - நாம்
நனவாக்கித் தருவோம் - உம்
பாத கமலங்களுக்கு, ஆசி வேண்டி உங்கள்
நினைவுகளுடன் வாழும்;

மனைவி, பிள்ளைகள்
குடும்பத்தினர்.

துன்னாலை. [20903]

## மருந்து வகைகள் வந்தன

யாழ்ப்பாணம், மே 10

யாழ். போதனா வைத்திய சாலைக்குத் தேவையான இவ் வருடத்தின் 2 ஆவது காலாண்டுக்குரிய மருந்து வகைகளில் ஒரு பகுதி கடந்த வியாழக்கிழமை வந்த குமண கப்பல் மூலம் இங்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

## லங்கா சிமெந்து நிறுவன ஊழியருக்கு

யாழ்ப்பாணம், மே 10

காங்கேசன்துறையில் உள்ள லங்கா சிமெந்து நிறுவன தொழிற்சாலையை புனரமைக்கும் வேலையில் தாமாக ஈடுபட விரும்பும் ஊழியர்களின் விவரங்களை கொழும்பு அலுவலகம் கோரியுள்ளது.

தொழிற்சாலைப் பகுதியில் உள்ள இடர்பாடுகளை அகற்றவும், துப்புரவு செய்யவும், கட்டடங்களை புனரமைக்கவும், பிரதான களஞ்சியப் பகுதிப் பொருள்களை பட்டியல்படுத்தவும் தொழிலாளர்கள் தேவை என்றும் —

அவர்களுக்கு 25 வீத சம்பளமும் தங்குமிட வசதி ஆகியவை வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [த-3]

## 40பேருக்கு முச்சக்கர வண்டி யாழ். செயலகம் வழங்கியது

யாழ். செயலக சமூக சேவைப் பகுதி இதுவரை 40 ஊனமுற்றோருக்கு முச்சக்கர வண்டிகளை வழங்கியுள்ளது.

யாழ். மாவட்டத்தில் மேலும் பலருக்கு முச்சக்கர வண்டிகள் தேவைப்படுவதாகவும் — அவற்றைப் பெற்றுக் கொள்வது தொடர்பாக வடக்கு - கிழக்கு மாகாண சபையுடன் தாம் தொடர்பு கொண்டுள்ளதாகவும் சமூக சேவைப் பகுதி வட்டாரங்கள் தெரிவித்தன, [த-5-162]

## முதலாமாண்டு பிறந்த தின வாழ்த்து

### ★ சரவணபவன் ஸ்ரீராம் ★

தெல்லிப்பபதி காசி விநாயகர் துர்க்கை அம்மன் அருளால் சரவணபவன்-மதிவதனி தம்பதிகளின் செல்வப் புதல்வன் ஸ்ரீராம் தனது முதலாமாண்டு பிறந்த தின விழாவை இன்று [10-05-92] குதூகலமாகக் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, பெரிய மாமா, பெரியமாமி மைத்துனி சரணியா, பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், மாமிமார் மற்றும் உற்றார், உறவினர் நண்பர்கள் சகல சௌபாக்கியங்களும் பெற்று, நீடூழி வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

''மதி அகம்'',
தெல்லிப்பழை. [20904]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
குகமயம்

# வட்டுக்கோட்டை
# பங்குருவிற்பதி ஸ்ரீசுப்பிரமணியசுவாமி கோவில்
# ★ மண்டலாபிஷேக பூர்த்தி விழா மலர் ★

## அருள் நெறி பூரணமாகிறது

உலகெங்கணும் விரிந்தொளி விளங்கும் பரம்பொருள்- ஆன்ம தரிசனத்திற்காகத் தன்னை அகப்படுத்தும் அருட்பாங்கின் திறமே பல்வேறு திருவுரு உற்பத்தியாகும். அதில் பிரம்மமாகிய பரம்பொருள் தன்னை நிகர்த்ததாகியும், அழகு உருவமாகியும் அமைந்ததே முருகனாவான்

முருக வழிபாடு, சிவ வழிபாட்டுக்குச் சமமானதாயும், முழுமைப் பேறாகிய முத்தியைத் தரக்கூடிய பெரு வழிபாடாகவும் தொன்றுதொட்டு விளங்கி வருகிறது.

வட்டுக்கோட்டை பங்குருவம்பதியில் எழுந்தருளி அருள்பாலிக்கும் சுப்பிரமணியப் பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும், மகா கும்பாபிஷேகம் நடைபெற்று, மண்டலாபிஷேகம் பூர்த்தி நடைபெறுவது அனைவருக்கும் அருள்நெறியைப் பூரணப்படுத்துவதாகும்

இப் புனித வைபவத்தை நிறைவேற்றியோர், பங்காற்றியோர், துதித்தோர்கள் அனைவருக்கும் சகல மங்களமும் கிடைக்கப் பிரார்த்திக்கிறோம்.

சுபம்.

முத்தமிழ்க் குருமணி, கிரியாக்கிரம ஜோதி
சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக் குருக்கள்
ஸ்ரீ கதிரமலைச் சிவன் தேவஸ்தானம்,
சுன்னாகம்.

★
★★
★



★
★★
★

## வேலைச் சிந்திப்போம் வினைகளை சந்திப்போம்

திருக்கோயில்களால் அணி செய்யப்படும் இடம் வட்டுக்கோட்டை

இங்கு வாழும் சைவமக்கள் அறப்பணிகளிலும் ஆன்மீகப் பணிகளிலும் மிக மிக ஈடுபாடு கொண்டவர்கள். காலத்துக்குக் காலம் திருப்பணிகளினால் ஆலயங்களைப் புதுக்குவித்து குடமுழுக்குக் காண்பவர்கள்.

இந்த ஒழுங்கிலே சமீபத்தில் பங்குரு சுப்பிரமணிய சுவாமி கோயில் குடமுழுக்குச் செய்யப்பட்டது. பூர்த்தி விழாவாக மண்டலாபிஷேகம் 10 - 05 - 1992 நடைபெற இருப்பது மிகவும் மகிழ்ச்சிக்குரியது.

தெய்வத்தொண்டில் ஈடுபடுவதும் தெய்வ தரிசனம் பெறுவதும் திருக்கோயில் வளர்ச்சிக்குப் பாடுபடுவதும் மானிடப் பிறவி எடுத்த எமக்கு இன்றியமையாத கடமைகளாகும்.

எனவே இப்பணியில் முன்னின்று உழைக்கும் அனைவரையும் வாழ்த்தி நிற்பதோடு, கந்தன் அருள் கிடைக்கப் பிரார்த்தித்தும் அமைகிறேன்.

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி,
தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பளை.

## எங்கும் புகழ் பெற்றிலங்கும் பங்குருவிற் கந்தப்பெருமான்

செல்வி றோகினி மருதவாணர்

செந்நெல் விளையும் வயல்களும், செழிப்பான நற்கனிமரச் சோலைகளும் சூழ, இன்னல்கள் நீக்கி இன்பங்கள் ஈயும் இறைவன் உறைகின்ற ஆலயங்களும், ஆயகலைகள் கற்றுத் தேறும் கல்விக்கூடங்களும் அமைந்துள்ளதும், மேன்மை கொள் சைவ நீதியை பரப்பும் அறிஞர்களும், செந்தமிழோடு சைவம் வாழ உழைக்கும் இளைஞர்களும், இன்பமே எந்நாளும் துன்பமில்லை என வாழ வழிகாட்டும் அருளாளர்களும், செந்தண்மைபூண்டொழுகும் அந்தணர்களும் வாழும் கிராமம் வட்டுக்கோட்டை.

அவ்வூரில் 'பங்குரு' எனும் இடத்தில் ஒரு நாவல் மரத்தில் சிறிய வைரவர் சூல வழிபாடுடன் 'பங்குரு வைரவர்' என அழைத்து ஆரம்பித்த வழிபாட்டு இடம் இன்று பங்குரு சுப்பிரமணியர் என்னும் நாமத்தோடு விநாயகர், நாகதம்பிரான், வைரவர் எனும் பரிவார மூர்த்திகளையும் மூலமூர்த்தியாக வள்ளி, தெய்வானை சமேத சுப்பிரமணியரோடு பெரிய ஆலயமாய் மாறியுள்ளது.

இவ் ஆலயம் அண்மையில் பல லட்ச ரூபா செலவில் புனரமைக்கப்பெற்று பஞ்சகுண்ட யாகம் அமைத்து, சென்ற 23-03-1992 திங்கட்கிழமை அன்று வாகீசவாரிதி நா. சர்வேஸ்வரக் குருக்களால் மகா கும்பாபிஷேகம் இனிதே நிறைவேற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து 48 நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெற்று இன்று ஞாயிற்றுக்கிழமை [10-05-1992] நிறைவுறும் வேளையில் இவ்வாலயத்தின் கடந்த கால வரலாற்றை நினைவு கூரல் நன்மை பயப்பதொன்றாகும்.

நாவல் மரத்தின் கீழ் ஆரம்ப வழிபாட்டுக்காலம் 1857 ஆம் ஆண்டாகக் காணப்படுகின்றது அப்போது அருணர் கதிரேசு என்பவர் தர்மகர்த்தாவாக இருந்தார். 1890 ஆம் ஆண்டளவில் கதிரேசரின் மகன் வைரவநாதர் தன் சொத்துக்களை ஆலயத்திற்கு தருமசாதனஞ் செய்தார். அவர்களின் வழித்தோன்றலாகிய சட்டத்தரணி க. சின்னத்தம்பி அவர்களே தற்போதைய தர்மகர்த்தாவாக உள்ளார்.

முருகேசு கந்தையா தர்மகர்த்தாவாக இருந்த காலத்தில் தான் ஆலயம் நன்கு பெருப்பிக்கப்பட்டு மூலமுருகன் ஸ்தாபனஞ் செய்யப்பட்டதெனலாம்.

### முந்திய மகா கும்பாபிஷேகங்கள்

இவ் ஆலயத்தில் 1925 ஆம் ஆண்டு, 1957 ஆம் ஆண்டுகளில் மகா கும்பாபிஷேகங்கள் நடைபெற்றன. இவ் வரலாறு இங்கு விரிக்கிற் பெருகும். தற்போதைய தர்மகர்த்தாவுடன் திருஞானசம்பந்தமூர்த்தி, சுந்தரமூர்த்தி, சட்டத்தரணி கதிரவேலு, முதலியார் சின்னத்தம்பி, வி. கே. கந்தசாமி, ப. முத்தையா பிள்ளை ஆகியோரும் ஆலய வளர்ச்சிக்கு அரும் பாடுபட்டனர்.

தற்போதைய அறங்காவலர் ஆரம்பித்த தருமசாதன நிதியத்தின் மூலமும், அவரையும், அவரைச் சார்ந்த உற்றார், உறவினர்கள் வழங்கிய பெரு நிதிகளின் மூலமும் ஆலயம் பல லட்ச ரூபா செலவில் இப்போது புனரமைக்கப்பட்டு அழகுறக் காட்சி அளிக்கின்றது. அதற்கு மேலும் ஆலயம் அமைந்துள்ள வயற் சூழல் மெருகூட்டுகின்றது.

### ஆலய வரலாறு

இந்த ஆலயத்தில் கார்த்திகை உற்சவம், கந்தசஷ்டி உற்சவம், திருவெம்பாவை உற்சவம், பத்து நாட்கள் அலங்கார உற்சவம் என்பன சிறப்புற நடைபெறுவது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். கூட்டு வழிபாடு இவ்வாலயத்தில் தவறாது நடைபெறும் சிறப்புமிகு நிகழ்ச்சியாகும்.

இவ்வாலயத்தில் நித்திய அர்ச்சகராய் அறுபது ஆண்டுகள் தொடர்ந்து கடமையாற்றிய பிரம்மஸ்ரீ மா. சடாட்சரக் குருக்களை கும்பாபிஷேகத்தின் போது தங்கப்பதக்கம் சூட்டி கௌரவிக்கப்பட்டமையும் இங்கு குறிப்பிடவேண்டிய ஒன்றாகும். ஆலய தர்மகர்த்தாவின் திட்டங்களாகிய நந்தவனம் அமைத்தல், அந்தணர்க்கு மனை அமைத்தல், அநாதை இல்லம் ஆரம்பித்தல் போன்றவை கூடிய விரைவில் கைகூட இறைவன் அருள்புரிவாராக.

பங்குருவில் உறையும் சுப்பிரமணியன் நாட்டில் இன்னல்கள் நீங்கி எல்லோரும் இன்புற்று வாழ அருள்பாலிப்பாராக. ★

மலராக்கம்:
சி. சபாநாதன்,
சங்கரத்தை.

### மண்டலாபிஷேகம்

மந்திரம், கிரியை, ஜபம், தியானம், ஹோமம், பாராயணம் முதலியவைகளால் பொலிவு பெற்று நிகழும் கும்பாபிஷேகக் கிரியையினால் ஆலயத்தில் தெய்வீக சாந்நித்தியம் ஏற்படும். இதனால் மக்கள் ஞானம் வரப் பெற்று நலமுடனும், செல்வச் சிறப்புடனும், வாழ்வர். கிராமத்திலும், உலகத்திலும் அமைதியும், சீரும் சிறப்பும் மேலோங்கும்.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து நிகழ்வது மண்டலாபிஷேகம். கும்பாபிஷேகம் செய்த பலனை அடையும் பொருட்டுஇன்றியமையாது செய்யப்படுவது மண்டலாபிஷேகமாகும்.

ஒரு மண்டலம் 45 நாட்களைக் கொண்டது. சிலர் 48 நாட்கள் என்றும் கொள்வர். கும்பாபிஷேகம், மகாபிஷேகம், மண்டலாபிஷேகம் ஆகியவற்றால் தெய்வீகப் பொலிவு பெற்ற கோயில்களில் நித்திய பூசைகள் எத்தகைய தடங்கலுமின்றி ஒழுங்காக நிகழ்த்தப்பட்டால் தான் கும்பாபிஷேகத்தினால் எமக்குப் பூரணமான பயன் கிட்டுவதாகும்.

பங்குருவான் அருள் பொலிய
பிரார்த்திப்போர்
★ மணிவிழா மாண்புற்ற ★
இந்து வாலிபர் சங்கம்,
வட்டுக்கோட்டை.

## நன்றிகள்

ஆலயத் திருப்பணிக்கும் மகாகும்பாபிஷேகம், மண்டலாபிஷேகம் போன்ற எல்லா நற்கைங்கரியங்களுக்கும் ஒத்துழைத்த அனைவருக்கும் முருகன் அருள் கிடைக்கப் பிரார்த்தித்து நன்றிகள் கூறுகின்றேன்.

க. சின்னத்தம்பி,
(சட்டத்தரணி), தர்மகர்த்தா.

## பங்குரு சுப்பிரமணியன் அருளுவானே!

ஐங்கரனின் சோதரனாம் ஆறு முகன்
அழகு தவழ் வட்டுநகர் கோயில் கொண்ட
பங்குருச்சுப் பிரமணியர் ஆல யத்தில்
பக்தியொடு பக்தர்மண் டலத்தின் பூர்த்தி
சங்கு வைத்தே அபிஷேக ஆரா தனை
சண்முகர்க்கு காணிக்கை தரும் விழாவாம்
பொங்கு தமிழ் ஈழநாட்டில் பொலிந்தே ஓங்கி
புனிதகுகன் நல்லருளைப் பெற்றே உய்வாம்.
★
சூரனவன் அகந்தைதனைத் தொலைத்த தீரன்
சுப்ரமண்ய மூர்த்தி வள்ளி குஞ்ச ரியும்
ஆரமா மலர் சூடி அழகு சேர
ஆனந்த கல்யாண மூர்த்தம் காட்டி
சீரது பொலிந்த தமிழ் ஈழவர் வாழ
செந்தமிழும் சைவமதம் செழித்தே ஓங்க
பாரதிலே கல்வியொடு செல்வம் வீரம்
பங்குருசுப் பிரமணியன் அருளுவானே!

- கவிமாமணி
பிரம்மஸ்ரீ மா. த. ந. வீரமணி ஐயர்.

[விளம்பர இல. சி-2302]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனை

அழகிய நல்ல இன பொமனேரியன், அல்சேஷன் பெண் நாய்க்குட்டிகள் இரண்டு மாதம் நிரம்பியவை, பூச்சி நீக்கப்பட்டது. அத்துடன் வேறு பொமனேரியன் நாய்களும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: செ. ஆனந்தன், அரசடி, தாமோதரம்பிள்ளை வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி. [20875]

வீடும், மூன்று பரப்புக் காணியுடன் விற்பனைக்கு உண்டு. யாழ். வளாகம், கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு அண்மையில் உண்டு. முகவரி: 66, கிரிதரன் வீதி, ஸ்ரேசன் றோட், கொக்குவில் கிழக்கு. வாங்க விரும்புவோர் நேரில் வரவும். தரகர்களைத் தவிர்க்கும்படி வேண்டுகின்றோம். [20915]

### விற்பனையாகின்றன

சகல விதமான அப்பியாசக் கொப்பிகள், C.R கொப்பிகள் இன்னும் பலவிதமான பாடசாலை உபகரணங்கள், அலுவலக உபகரணங்கள் விற்பனையாகின்றன. 'சோபிதா' 363, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். [20819]

### தேவை

வயோதிபத் தம்பதிகளைப் பராமரிக்கவும், வீட்டு வேலைகளைக் கவனித்து சமையல் செய்யவும், தகுந்த 40க்கு மேற்பட்ட வயதுடைய குடும்பப் பொறுப்பற்ற பெண் உதவியாளர் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம். உடன் வரவும். 217/2, கடைச்சாமி வீதி, யாழ்ப்பாணம். (20914)

### மணமகள் தேவை

சவூதியில் டெக்னீசியனாக தொழில் புரிந்து யாழ். திரும்பவிருக்கும் இந்து 38 வயது, ஆயிலியம். செவ்வாய்க் குற்றமற்ற மகனுக்கு பெற்றோர் 33 வயதுக்கு உட்பட்ட பொருத்தமான துணையைத் தேடுகின்றனர். முதல் கடிதத்திலேயே முழு விவரங்களுடன் எழுதவும். இல. 404, C/o, உதயன். [20894]

### மணமகன் தேவை

செவ்வாய்க் குற்றமற்ற, விசேட பயிற்சி பெற்ற, 25 வயதான ஆசிரியைக்குப் பெற்றோர் மணமகனைத் தேடுகின்றனர், நட்சத்திரம் ஆயிலியம். மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம். (20907)

### மணமக்கள் தேவை

இந்து சைவபோசன குற்றமற்ற 29 [ஆயிலிய நட்சத்திரம்] மணப்பெண்ணுக்கும், 33 வயது, பரணி நட்சத்திரமுடைய வேலை செய்யும் மணமகனுக்கும் பெற்றோர் தனியாகவோ, மாற்றாகவோ தேடுகின்றனர். மங்கள, ஏஜென்சி, கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம். [20908)

### மணப்பெண் தேவை

யாழ்ப்பாண இந்து, 36 வயது, செவ்வாய்க் குற்றமற்றவர், பாவம் 44, கிராம சேவகருக்கு தேவை. நட்சத்திரம்: அனுஷம், மங்கள ஏஜென்சி கொய்யாத் தோட்டம் யாழ்ப்பாணம். (20906)

### பழைய புத்தகங்கள்

பாவித்த புத்தகங்கள் நியாய விலையில் வாங்க, விற்க, நகரில் புதிதாக, யாழ். பழைய புத்தகக் கடை, 32, அருச்சுனா [ஸ்ரான்லி] வீதி, யாழ்ப்பாணம். [4633]

### திருமண சேவை

செவ்வாய்க்குற்றமற்ற உயரம் 5' 7'', வயது 29 மணமகன் M' Phil முடித்துவிட்டு Ph. D. செய்து கொண்டிருப்பவருக்கு, இக்கோடை முடிய முன் திருமணம் செய்ய இருக்கிறார். தொடர்பு புதிய மாங்கல்யா மல்றி சேவிஸ். கு. திருவிளங்கம், 361, பருத்தித்துறை வீதி, நல்லூர் யாழ்ப்பாணம். [20876]

ABCDE ஸ்தாபனத்தில் செவ்வாய் குற்றம் உள்ளவர்களும், அல்லாதவர்களும் இலக்கினத்தில் ராகு, கேது உள்ளவர்கள், ஆசிரியர்கள், டாக்டர்கள், பொறியியலாளர்கள் வேறு சில தொழில் புரிபவர்கள் உள்ளனர். உங்கள் தேவை எதுவாகிலும், தொடர்பு கொள்ளவும். இல. 20, கண்டி வீதி, சுண்டிக்குளி. [20905]

### நீமியா உரம்

சிறந்த அடிக்கட்டு உரம். பூச்சிகளிலிருந்து பாதுகாப்பு. மண்ணுக்கு வளம். அதிக விளைச்சல். அண்ணா கோப்பி கடைகளிலும் கிடைக்கிறது. மில்க்வைற். [சி-1994]

### சோதிடம்

கைப்பலனும் - கோள் நிலையும் ஆராய்ந்து பிற நாட்டுப் பிரயாணம், காதல், கல்யாணத்தில் மாப்பிள்ளை முழு விவரங்களறியவும், திருமணப் பொருத்தங்கள் குறைந்த சலாரிலும், கல்வி, நோய்கள் எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்க்கமான ஆலோசனை பெற அழைக்கின்றோம். இராசேந்திரன், ''திருவுளம்'' கிர்தரன் வீதி, ஸ்ரேசன் றோட், கொக்குவில் கிழக்கு. [20916]

### ஜோதிட விஞ்ஞானம்

வெள்ளி தெசை பிரேமதாசாவை ஆயுட்கால ஜனாதிபதியாக்கும். அஷ்டமத்துப் புதன் தெசை ஸ்ரீமாவோவை அரசியலில் அஸ்தமனமாக்கும். நீசச் செவ்வாய் தெசை ஜெயலலிதாவின் பதவியைச் சரிக்கும். மத்தியில் ஆளும் காங்கிரஸ் இடையில் கவிழும், செவ்வாய் மாற்றம் 7/- S. செல்வரத்தினம் ஸ்ரோர்ஸ், 48, இராசாவின் தோட்டம், ஸ்ரான்லி றோட் சந்தி, யாழ்ப்பாணம். Prof: சத்தியதாஸன். (4843)

### கல்வி

G.C.E. (O/L) இல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் இதுவரை சித்தி அடையாதவர்களுக்கும், ஆரம்ப அறிவின்றிக் குறைந்த புள்ளிகளைப் பெற்றவர்களுக்கும் 25 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் விசேட சித்திக்குக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, சுண்டிக்குளி [20924]

Spoken English with Grammar உட்பட புலமைப் பரிசில் வகுப்பிலிருந்து A/L வரை சகல பாடங்களும் அதி உயர் விசேட தரத்திற்குக் கற்பிக்கப்படும். க. ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, சுண்டிக்குளி. [20925]

### வினா - விடை

கடந்த கால விஞ்ஞான பாடங்களுக்கான வினாக்களும், விடைகளும் விற்பனைக்கு உண்டு. 'A' Level Centre, உயர் தரா தரக் கல்வி நிலையம், பருத்தித்துறை வீதி, 1 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [சி-2204]


## கிருபா நகை மாளிகை

உங்களை வரவேற்கின்றது

தங்க, வைர நகை தேவைகளுக்கு நயம், நம்பிக்கை, நாணயமுள்ள ஸ்தாபனம்

"கிருபா நகை மாளிகை"

★ நவ நாகரீக நகைகளுக்கு "கிருபா"
★ ஓடர் நகைகள் குறித்த தவணையில் சிறந்த முறையில் கவனிக்கப்படும்.

"கிருபா நகை மாளிகை"

மு. கிருபாலன்,
உரிமையாளர்,
294, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

[சி-2290]


## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## திருஞானசம்பந்தர் அரியநாயகம்

[நிர்வாக உத்தியோகத்தர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் ]

தோற்றம்: 08-09-1931

மறைவு: 10-05-1990

அன்பு காட்டி அணைத்துப்
பண்பு காட்டி வளர்த்து
எம்மை வாழ வழி வகுத்த
குலதெய்வமே! ஆண்டு இரண்டு ஆகியும்,
ஆறாது எங்கள் நினைவு.

மனைவி, பிள்ளைகள்.

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.

[20919]

## ஓராண்டு நினைவஞ்சலி



திருமதி

## மனோன்மணி அப்பாத்துரை

தோற்றம்: 18-03-1905

மறைவு: 22-04-1991

திதி: 10-05-1992

உங்கள் ஆத்மா சாந்தி அடைய இந் நாளில் இறைவனை வேண்டுகின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

யாவில் லேன்,
ஆனைக்கோட்டை.

[20851]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்

வருகை: 11 — 06 — 1907



மறைவு: 10 — 04 — 1992

## திருமதி பசுபதம் குணரத்தினம்

அன்னாரின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும், முன்னின்று நடத்தி உதவி செய்தவர்களுக்கும், அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். எமது இல்லத்தில் இன்று (10-05-1992) ஞாயிற்றுக்கிழமை இடம்பெறும் சபிண்டீகரணக் கிரியையில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டி.

''குரு இல்லம்'',
புலோலி கிழக்கு.
பருத்தித்துறை.

(20920)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வளமுற வாழ்க!

சித்தம் அழகியார் செந்தமிழின் சீர்தேர்ந்தார்
நித்தம் கலையே நினைத்துயவார் - உத்தமனார்
பேரா சிரியர் சிவத்தம்பி பல்லாண்டு
சீரார் தமிழ்போல் சிறக்க!

★

அன்பினில் விளைந்ததால் பொலிந்ததுன் தேசு;
ஆற்றலில் நிமிர்ந்ததுன் மாண்பு;
நுண்கலை மாந்தலால் சிறந்ததுன் சால்பு;
நுகர்ச்சியால் மிகுந்ததுன் தகுதி;
செந்தமிழ் ஆய்வினால் செழித்ததுன் கீர்த்தி
செப்பிடு மொழிகளால் மிளிர்ந்திடும்மேடை
வந்தவள் மாண்பினால் மலர்ந்ததுன் இல்லம்
வளமுற வாழ்கநீ '' கா.சி ''

நயினைக் கவிஞர்
- நா.க. சண்முகநாதபிள்ளை.

[பேராசிரியர் கா. சிவத்தம்பியின் மணிவிழாவை ஒட்டி இக் கவிதை வெளியிடப்படுகிறது ]

## பிரபாவை கைது செய்ய
# காலக்கெடு விதிக்கிறார் சுப்பிரமணிய சுவாமி

கொழும்பு, மே 10

எதிர்வரும் ஆகஸ்ட் 15 ஆம் திகதிக்கு முன்னர் விடுதலைப் புலிகள் தலைவர் திரு பிரபாகரனை இந்திய மத்திய அரசு பிடிக்க வேண்டும். தவறினால் எதிர்ப்பு இயக்கம் ஒன்றை ஜனதாக்கட்சி ஆரம்பிக்கும்.

- இப்படி அக் கட்சியின் தலைவர் டாக்டர் சுப்பிரமணிய சுவாமி அறிவித்திருக்கிறார்.

விடுதலைப் புலிகள் தலைவரை தமது சகோதரன் என்று அழைக்கும் ஜனாதிபதி பிரேமதாஸா, விடுதலைப் புலிகள் தலைவருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பார் என்று எதிர்பார்ப்பது முட்டாள் தனமானது என்று அவர் சொன்னார்.

தேவையேற்படின் இது தொடர்பாக ஐ. நா. பாதுகாப்புச் சபையுடன் இந்தியா தொடர்பு கொள்ள முடியும் என்றும் —

இலங்கைக்கு எதிராகத் தடைகள் விதிக்கப்பட வேண்டும் என்றும் சுப்பிரமணிய சுவாமிகள் மேலும் கூறினார்

திரு. பிரபாகரனைப் பிடிப்பதற்குத் தேவையான நிர்ப்பந்தங்களை மத்திய அரசு மீது செலுத்துவதில் இந்திரா காங்கிரஸ் எம். பிக்கள் தோல்வியடைந்து விட்டனர் இதனை தமிழ் நாட்டில் இந்திரா காங்கிரஸ் எம். பிக்கள் பிரதிநிதித்துவம் செய்யும் தொகுதிகளில் உள்ள மக்களுக்கு எடுத்துக் கூற, தாம் இம் மாதம் 21 ஆம் திகதி முதல் அத் தொகுதிகளில் பிரசாரம் செய்யப் போவதாகவும் அவர் கூறினார்

இம் மாதம் 21 ஆம் திகதி இந்தியாவில் விடுதலைப் புலிகள் இயக்கம் மீது தடை விதிக்கப்படாத பட்சத்தில் தமிழ் நாட்டைச் சேர்ந்த

[6 ஆம் பக்கம் பார்க்க]


## ஐந்தாவது பிறந்ததின வாழ்த்து
### கோபாலசர்மா ஹம்ஸத்வனி

கந்தரோடையைச் சேர்ந்த கோபால சர்மா பவானி தம்பதியரின் செல்வப் புதல்வி ஹம்ஸத்வனி தனது ஐந்தாவது பிறந்ததினத்தைப் புதிய இல்லத்தில் இன்று கொண்டாடுகிறார். நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் அருளுடன் பல்கலையும் கற்று பல்லாண்டு வாழ இவரை அப்பா, அம்மா, தாத்தாமார், பாட்டிமார், அம்மம்மா, மாமாமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பா, சித்தி, மயூரிக்குட்டி ஆகியோர் வாழ்த்துகின்றனர்.

கந்தரோடை,
சுன்னாகம். (20933)



## 1 ஆம் வருட நினைவஞ்சலி

பிறப்பு:
11 - 11 - 1918

இறப்பு:
11 - 05 - 1991



### அமரர் அத்தனாஸ் சிங்கராயர்
(ஐயாத்துரை)

எதிர்வரும் 11 - 05 - 92 திங்கட்கிழமை காலை 6 மணிக்கு இவருடைய ஆன்ம இளைப்பாற்றிக்காக யாழ். அருள் ஆச்சிரமம் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் இரங்கற் திருப்பலியில் கலந்துகொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்:
சகோதரர், மைத்துனர், மருமக்கள்
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

32/10, அச்சக ஒழுங்கை,
யாழ்ப்பாணம். [20934]


# புலிகள் மீது தடை விதிக்க இந்தியா பின் நிற்பதேன்?

புதுடில்லி, மே 10

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீது இந்தியாவில் தடை விதிப்பதற்கு புதுடில்லி அரசு பின்னடிப்பதேன்?

இதற்கு பல்வேறு காரணங்களும் கூறப்படுவதாக கொழும்பில் இருந்து வெளிவரும் ''டெய்லி நியூஸ்'' பத்திரிகை தனது சென்னைச் செய்தியாளரை ஆதாரங்காட்டி செய்தி வெளியிட்டிருக்கிறது. அந்தச் செய்தியில் கூறப்பட்டிருப்பதாவது;-

இந்திரா காங்கிரஸில் உள்ள சிலர் ''இலங்கை விஷயத்தைப் பொறுத்த வரையில் என்ன நடவடிக்கை எடுப்பது என்ற தெரிவுகளை புதுடில்லி அரசாங்கம் மூடாது வைத்திருக்கவே [To Keep New Delhi's options open in regard to Sri Lanka] விரும்புகின்றது.'' — என்று கூறுகிறார்கள்.

அருகில் இருக்கும் இலங்கைத்தீவில் என்ன நடக்கின்றது என்பது குறித்து இந்தியா தனது கண்களை மூடிக்கொண்டிருக்க முடியாது என்ற உண்மையை அதற்கு அவர்கள் காரணமாகக் காட்டுகின்றார்கள்.

இந்தியாவில் உள்ள 5 கோடி தமிழர்களுடன், இலங்கையில் துன்புறுத்தலுக்குள்ளாகியுள்ள தமிழர்களுக்கு இனரீதியான தொடர்புகளும் உள்ளன.

இந்தியாவின் உதவியுடன் இலங்கை இனப் பிரச்சினைக்கு தீர்வு காணப்படவேண்டுமானால்— இலங்கையில் இன்றுள்ள— நம்பகத்தன்மையுள்ள— ஒரே ஒரு தமிழர் படையான விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் புதுடில்லி சம்பந்தப்படுவது அவசியம். அப்படியில்லாமல் தீர்வு காண முடியாது என்றும் இந்திரா காங்கிரஸில் உள்ள அச்சிலர் கூறுகின்றனர்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீது விதிக்கப்படும் தடை அந்த இயக்கத்துடனான உறவுகளை மேலும் சீர்கெடச் செய்யும் என்றும், அது அந்த இயக்கத்துடன் மீண்டும் நட்புறவை ஏற்படுத்துவதை மேலும் கடினமாக்கி விடும் என்றும் அவர்கள் கருதுகின்றனர்,

பிரதமர் ராவ் மீண்டும் தம்முடன் உறவை ஏற்படுத்துவார் என்று விடுதலைப் புலிகள் இயக்கம் நம்புகிறது.

இதேவேளை—

இந்தியாவில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தேசவிரோத நடவடிக்கைகளை அந்த இயக்கத்தின் மீது தடைவிதிக்காமலேயே கட்டுப்படுத்தலாம் என்று பலரும் எண்ணுகின்றனர். ''விடுதலைப் புலிகளைத் தடை செய்யாது, அவர்களின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதைத் தொடர முடியும்''— என்று பொலீஸ் அதிகாரி ஒருவர் சொன்னார்.

ராஜீவ் கொலை வழக்கின் குற்றப் பத்திரிகை எதிர்வரும் ஜூன் அல்லது அதற்குப் பின்னர் தாக்கல் செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதன் பின்னர் விடுதலைப் புலிகள் மீதான தடை வரக்கூடும் என சில உத்தியோக வட்டாரங்கள் கருதுகின்றன.

எவ்வாறாக இருப்பினும் விடுதலைப் புலிகள் மீது தடை விதிப்பதில் ஏற்பட்டுள்ள தாமதம் வதந்தி ஒன்றை ஏற்படுத்தியிருக்கிறது.

ராஜீவ் காந்தியின் வழியில் இருந்து விலகி சொந்த வழியில் செல்ல, விடுதலைப் புலிகள் மீதான தடை விவகாரத்தை பிரதமர் நரசிம்மராவ் பயன்படுத்துகின்றார் என்ற வதந்தியே அது.

—இப்படி 'டெய்லி நியூஸ்' செய்தி கூறுகின்றது.

[உ-எ]

# புலிகளை தடை செய்யாதீர்! பாட்டாளி கட்சி கோரிக்கை
## பிரதமரிடம் நேரில் தெரிவிக்கும்

சென்னை, மே. 10

விடுதலைப்புலிகளை தடை செய்ய வேண்டாம் என்று பிரதமர் நரசிம்மராவை நேரடியாகச் சந்தித்து வலியுறுத்த பாட்டாளி மக்கள் கட்சிக் குழு ஒன்று டில்லி செல்லவிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

கட்சியின் முக்கிய உறுப்பினர்களைக் கொண்ட இத் தூதுக்குழு விரைவில் நரசிம்மராவைச்சந்தித்து இது தொடர்பாக பேச்சு நடத்தவிருப்பதாக அந்தக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

திரு. ராமதாஸ் தலைமையிலான இக் கட்சியினர் விடுதலைப் புலிகளுக்கு எதிராக தமிழ் நாட்டில் எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்துக் கண்டனம் தெரிவித்து வருவதுடன் அதற்கு எதிரான நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (த-3)

## புலிகளைத் தடை செய்தால்
# மேலும் கடும் அதிகாரங்கள் 'ஜெ' அரசுக்குக் கிடைக்கும்

விடுதலைப் புலிகள் இயக்கத்தை இந்திய அரசு தடை செய்தால், தமிழ்நாட்டில் ஜெயலலிதாவின் அரசுக்கு மேலும் கடும் அதிகாரங்கள் கிடைக்கும் என அரசியல் வாதிகளும், அதிகாரிகளும் கருதி வெளியிட்டுள்ளனர்.

ஜெயலலிதா அரசு தனது அரசியல் எதிரிகளுக்கும் தனது அரசைக் கண்டிப்பவர்களுக்கும் எதிராக பயங்கரவாத தடுப்புச் சட்டத்தைப் பயன்படுத்தலாம் என்ற அச்சம் ஏற்கனவே இருந்து வருகிறது.

இந்நிலையில் புலிகளுக்குத் தடை விதிக்கப்பட்டால், அதனைப் பயன்படுத்தி மேலும் பல அதிகாரத் துஷ்பிரயோக நடவடிக்கைகளில் தமிழக அரசு இறங்கக்கூடும் எனச் சுட்டிக் காட்டப்படுகிறது.

இதேசமயம்—

விடுதலைப் புலிகளுக்குத் தடை விதிப்பதில் தாமதம் காட்டப்படுவது தமிழகத்தில் உள்ள புலிகள் ஆதரவு சக்திகளுக்கு தைரியத்தை ஊட்டியிருப்பதாக மற்றொரு செய்தி தெரிவித்தது. [உ-3]

## சந்தை விலைகள் (08-05-92 ஆம் திகதியன்று)

| பொருள் [கி. கிராம்] | திருநெல்வேலி | யாழ். பெரிய கடை | சுன்னாகம் | பண்டத்தரிப்பு | அச்சுவேலி | பருத்தித்துறை | கொடிகாமம் |
|---|---|---|---|---|---|---|---|
| குத்தரிசி | 22-50 | 24 00 | 26-00 | 21-00 | 24-00 | 20-00 | 20-00 |
| கோதுமை மா | 13-00 | 12-50 | 14-00 | 13-00 | 13-00 | 12-00 | 13-00 |
| சீனி | 33 00 | 32-60 | 33-00 | 36-00 | 33-00 | 36-00 | 32-00 |
| உழுந்து | 47-00 | 46-00 | 40-00 | 42 00 | 40-00 | 43-00 | 34-00 |
| பயறு | 30-00 | 25-00 | 35-00 | 25-00 | 24-00 | 30-00 | 34-00 |
| கௌபி | 20 00 | 23-00 | 28-00 | 22-00 | 28-00 | 28-00 | 25-00 |
| செ. மிளகாய் | 72 00 | 75-00 | 75-00 | 65-00 | 75-00 | 80 00 | 70-00 |
| தக்காளி | 18-00 | 20-00 | 20-00 | 10-00 | — | 10-00 | 15-00 |
| கத்தரி | 24-00 | 24-00 | 22-00 | 18-00 | 22 00 | 20-00 | 22-00 |
| வெண்டி | 24-00 | 24 00 | 15 00 | 15-00 | 25-00 | 20-00 | 10-00 |
| பாகல் | 28-00 | 30 00 | 20-00 | 18-00 | 30-00 | 22-00 | — |
| புடோல் | 9-00 | 10-00 | 7-00 | 4-00 | — | 20 00 | — |
| பயிற்றங்காய் | 20 00 | 24-00 | 15-00 | 15 00 | 28-00 | 20-00 | 12-00 |
| கோவா | — | — | — | 5-00 | — | 10-00 | 5-00 |
| கரட் | 24-00 | 24-00 | 15-00 | 6-00 | 25-00 | 8-00 | 15-00 |
| பீற்றுட் | 5 00 | 7-00 | 5-00 | 2-50 | 12-00 | 6-00 | 5-00 |
| வாழைக்காய் | 15-00 | 20-00 | 20 00 | 30-00 | 25-00 | 20-00 | 16-00 |
| ப. மிளகாய் | 35-00 | 30-00 | 22-00 | 25-00 | 50-00 | 100-00 | 32-00 |
| வெங்காயம் | 10-00 | 16-00 | 10-00 | 8-00 | 12-09 | 15-00 | 15-00 |
| தேங்காய் | 14-50 | 15-00 | 18-00 | 15-00 | 15-00 | 18-00 | 12-00 |
| வாழைப்பழம் | 16 00 | 18-00 | 20-00 | 20-00 | 20-00 | 20-00 | 20-00 |
| பெரிய மீன் | — | — | 60-00 | — | — | 150-00 | 120-00 |
| சிறிய மீன் | — | — | 120-00 | — | — | 90-00 | 40-00 |
| முட்டை | — | 8-00 | — | 8-00 | 6-50 | 10-00 | 5-00 |
| மண்ணெண்ணெய் [லீற்றர்] | 24-00 | 24-00 | 25-00 | 26-00 | 25-00 | 25-00 | 26-00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி இராசம்மா நடராசா

சுதுமலை தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி இராசம்மா நடராசா காலமாகி விட்டார்.

இவர் திரு. மைசூர்நாதன் (அண்ணா தொழிற்சாலை, இணுவில்), திரு. சூரியநாதன் (இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்), திரு ஜெகநாதன் (அவுஸ்திரேலியா), செல்வி திருச்சாதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி யோகேஸ்வரி, திருமதி சுபத்திராதேவி, திருமதி விமலினிதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும், தயாளினி, தர்மினி, லசாந்தி ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக் கிழமை (10-5-92) காலை 9-30 மணியளவில் சுதுமலையிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் தாவடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
ந. மைசூர்நாதன்
(அண்ணா தொழிற்சாலை, இணுவில்)
ந. சூரியநாதன்.
(இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்)

சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

20930)

## செல்லையா ஜெகதாம்பிகை

செல்லையா ஜெகதாம்பிகை காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற நாகமுத்து சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், செல்லையாவின் அன்பு மனைவியும், யசோதராணி, சந்திரராசன், ஜெயராணி, யோகராணி, சிறீராசன், தனராசன் (கொலண்ட்) காலஞ் சென்ற வசந்தராசன், மற்றும் மோகனராசன் ஆகியோரின் அன்பு தாயாரும், இரத்தினம், பாலசுந்தரம், சாந்தராணி யோகராணி, ஆகியோரின் மாமியாரும் இந்திராவதி, காந்திமதி மனோன்மணி, இராஜேஸ்வரி (ஜேர்மனி), இராமசந்திரன், (மினிப்பிரியா ரேடேர்ஸ், அச்சுவேலி), இந்திர கோமதி ஆகியோரின் சகோதரியும், காலஞ் சென்ற கந்தையா, வீரசிங்கம், கந்தசாமி, சின்னத்துரை, மகாலிங்கம், ரஞ்சினி ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (11-5-92) திங்கள் காலை 10-00 மணிக்கு அரியாலை சித்துபாத்தி மயானத்தில் தகனம் செய்யப்படும்

தகவல்:
நா. இராமச்சந்திரன்.

62. இலந்தைக் குளம் வீதி,
அரியாலை.

[20926]

## வி. இராசரத்தினம்

சண்டிலிப்பாய் சீரணி, பேக்கரி ஒழுங்கையைச் சேர்ந்த விநாசித்தம்பி இராசரத்தினம் காலமானார்.

அன்னார் பார்வதிப்பிள்ளையின் கணவரும், மகாராணி சிவானந்தன் [லண்டன்], ஜெயரத்தினம், ஜெயராணி ரவீந்திரன் [லண்டன்], சிவகுமார் [லண்டன்], ஜெயகௌரி [லண்டன்] ஆகியோரின் தந்தையாரும், ஆ. சிவானந்தன் [லண்டன்], க. ரவீந்திரன் [லண்டன்], இராஜேஸ்வரி ஆகியோரின் மாமனாரும், சோபிகா, கிரிசான் ஆகியோரின் பேரனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவருடைய இல்லத்தில் இன்று 10-05-92 ஞாயிற்று கிழமை காலை 10 மணிக்கு நடைபெற்று, தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் மானிப்பாய், பிப்பிலி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் உறவினர், நண்பர்கள் அனைவரும் இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்!
ஜெயரத்தினம்
[மகன்]

பேக்கரி ஒழுங்கை,
சீரணி,
சண்டிலிப்பாய்.

[20932]

## அம்பலவாணர் சிவசுப்பிரமணியம்

(ஓய்வு பெற்ற சிறாப்பர்)

திருநெல்வேலி கலாசாலை வீதியைப் பிறப்பிடமாகவும் சிவப்பிரகாசம் வீதி வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலவாணர் சிவசுப்பிரமணியம் காலமானார். இவர் காலம் சென்ற பிரபல ஆயுள்வேத வைத்தியர் அம்பலவாணர் தம்பதிகளின் புதல்வரும், மகேஸ்வரியின் அன்புக்கணவரும், சிவசாந்தி [நோர்வே], சிவறஞ்சன் [நோர்வே], சிவச்சந்திரன் [நோர்வே], சிவஜெயந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும், சச்சிதானந்தம் [நோர்வே] சத்தியரூபி [நோர்வே], செய்யேந்திரம் ஆகியோரின் அன்பு மாமனும் நமேஸ், நித்தியா மயூரன் ஆரபி, றஞ்சனி நிதுஜர், ஆதவன், நிஷாருணி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் [10-5-92] இன்று பிற்பகல் 3 மணியளவில் கோம்பயன் மணல் மயானத்திற்கு தகன கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்

தகவல்
திருமதி மகேஸ்வரி சிவசுப்பிரமணியம்
(மனைவி)

42, சிவப்பிரகாசம் வீதி,
வண்ணார் பண்ணை
யாழ்ப்பாணம்.

[20935]

# இன்று

யாழ்ப்பாணம், மே 10

யாழ். சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் "டொனால்ட் கணேசகுமார்" ஞாபகார்த்த கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று யாழ்ப்பாணம் பல்கலைக் கழக அணியை எதிர்த்து தெல்லிப்பளை கிறாஸ் கொப்பர்ஸ் அணி மோதும்.

இந்த ஆட்டம் இன்று காலை 9 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகும்.

★ ★ ★

யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழு நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இரண்டாம் கட்ட ஆட்டங்களில் இன்று சென். அன்ரனீஸ் அணியை எதிர்த்து விநாயகர் அணி மோதும்.

இந்த ஆட்டம் இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகும்.

[உ]

## தமிழ்நாடு..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

றம் இடைக்கால தடை உத்தரவு விதித்ததும் தெரிந்தவையே

எனினும் தமிழக சட்டசபை உயர்நீதிமன்ற உத்தரவை ஏற்க மறுத்தது. அது தொடர்பாக தமிழக சட்டசபையின் சிறப்புக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவை, இந்திய உயர்நீதிமன்றம் பெரும் சட்ட மீறல் நடவடிக்கை என்ற கண்ணோட்டத்துடன் நோக்கி கருத்து வெளியிட்டது.

தமிழக சட்டசபையின் முடிவு குறித்து ஆழ்ந்த அதிர்ச்சியை வெளியிட்ட நீதிமன்றம் இதுபற்றி இறுதி முடிவு எடுக்க சட்டமா அதிபரின் உதவியை நாடியதும் தெரிந்ததே.

இது பற்றி நீதிமன்றில் கருத்து வெளியிட்ட சட்டமா அதிபர் — "நீதிமன்றின் முக்கியத்துவத்தை சட்டசபை சரியாகப் புரிந்து கொள்ளாமல் இருந்திருக்கலாம். சட்டசபை தனது தீர்மானத்தை தொடர்ந்து பிடித்துக்கொண்டிருந்தால் அது நீதிமன்ற அவமதிப்பாகத்தான் இருக்கும்." — என்று கருத்து வெளியிட்டார்.

இந்நிலையில் உயர்நீதிமன்றத் தீர்ப்புக்கு கட்டுப்படப் போவதில்லை என்ற கருத்தில் தமிழக சபாநாயகர் சேடப்பட்டி முத்தையா நேற்று பத்திரிகை அறிக்கை ஒன்றை வெளியிட்டார்.

நீதிமன்றத் தீர்ப்புக்கு சட்டசபை இணங்க மறுத்தால், அது அரசமைப்புச் சட்ட மீறலாகவே நீதிமன்றினால் கருதப்படும் என்றும்—

அத்தகைய நிலை ஆட்சிக் கலைப்புக்கு வழி செய்யும் நிலையை உருவாக்கும் என்றும் சட்ட, அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டனர்.

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 143 ஆவது பிரிவின் பிரகாரம்—

அரசமைப்புச் சட்டத்தின்படி ஓர் அரசை நடத்திச் செல்ல முடியாத நிலை உருவாகியுள்ளது என்று ஜனாதிபதிக்கு உயர் நீதிமன்றம் பரிந்துரை வழங்கலாம்.

அப்படி பரிந்துரை வழங்கப்பட்டால் அந்த ஆட்சியை [சட்ட மன்றத்தை] கலைத்துவிட்டு குடியரசுத் தலைவரின் ஆட்சியை பிரகடனப்படுத்துவதைத் தவிர, நிலைமையைச் சீர்செய்ய ஜனாதிபதிக்கு வேறு வழியில்லை — என்று அவதானிகள் கருத்து வெளியிட்டனர்

[உ-5]

## காலக்கெடு..

[5 ஆம் பக்கத் தொடர்ச்சி]

இந்திரா காங்கிரஸ் எம் பிக்கள் பதவி விலக வேண்டும் என்றும் டாக்டர் சுவாமி கோரியுள்ளார். அவர்கள் [illegible] விலகக் கோரும் இயக்கம் ஒன்றை [illegible] நடத்தப் போவதாகவும் அவர் தெரிவித்தார்.

[உ-எ]

# அரசில் இடம் பெற்றோர் ஜே.வி.பியுடன் சதித் திட்டம்?

## உடுகம்பொல சந்தேகம்

ஜே. வி. பிக்கு எதிராக அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வந்த காலப் பகுதியில், அரசியல் அங்கம் வகித்தவர்களில் ஒரு பிரிவினர் ஜே. வி. பியுடன் கூட்டரசாங்கம் ஒன்று அமைப்பது பற்றி ஜே. வி. பி. தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்திவந்தனர்.

—இவ்வாறு சந்தேகம் கிளப்பினார் பிரதிப் பொலீஸ் மா அதிபர் பிரேமதாஸா உடும்பொல,

நேற்று அவர் வெளியிட்ட அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு சந்தேகம் வெளியிட்டதாக "ராவய" சிங்கள வார இதழின் ஆசிரியர் பி. பி. ஸிக்குத் தெரிவித்தார். [உ-10]

# இரத்தினபுரிப் பகுதியில் மறித்தும் நிற்காமல் சென்ற கார் மீது பொலீஸார் சூடு!

## சம்பந்தப்பட்டோர் காயங்களுடன் தப்பினர்

கொழும்பு, மே 10

இரத்தினபுரிப் பகுதியில் மறித்த போது நிற்காமல் சென்ற கார் ஒன்றின் மீது பொலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

காரில் வந்தவர்கள் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் தப்பிச் சென்றனர்.

இந்தச் சம்பவம் குறித்து பொலீஸார் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

இரத்தினபுரி — எம்பிலிப்பிட்டிய வீதியில் கொடகாவெல என்னுமிடத்தில் வைத்து மேற்படி காரின் பின்பக்க டயர்கள் மீது பொலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

சிறிது நேரத்தின் பின்னர் காட்டுப் பகுதியில் அக்காரை கைவிடப்பட்ட நிலையில் பொலீஸார் கண்டுபிடித்தனர்.

காரினுள் இரத்தம் சிந்திக் கிடக்கக் காணப்பட்டது. சதைத் துண்டங்களும் காணப்பட்டன ஆனால் அதில் பயணம் செய்தவர்கள் எவரையும் காணவில்லை. அவர்களுக்கு என்ன நடந்தது, அவர்கள் என்னவானார்கள் என்பது மர்மமாக இருப்பதாக பொலீஸார் கூறுகின்றனர்.

காரினுள் இருந்த டயறி ஒன்றை பொலீஸார் கைப்பற்றினர். அதில் ஆங்கில மொழியில் சில குறிப்புகளும் தொலைபேசி இலக்கங்களும் எழுதப்பட்டிருந்தன.

காரில் பயணம் செய்தவர்கள் அடையாளம் கண்டுபிடிக்கப்படாத ஓர் இடத்தில் உள்ளவர்களுக்கு ஆயுதங்களும் வெடிப்பொருள்களும் வழங்கியிருக்கலாம் என்றும் பொலீஸார் நம்புகின்றனர்.

இச் சம்பவத்தை அடுத்து கார் கைவிடப்பட்டிருந்த காட்டுப் பகுதியைப் பொலீஸார் முற்றுகையிட்டு தேடுதலை ஆரம்பித்தனர்.

அக்காட்டுப் பிரதேசத்தினுள் எவரும் போக, வர தடை விதிக்கப்பட்டுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. [உ-எ]

# இன்று மணி விழா

யாழ்ப்பாணம், மே10

பேராசிரியர் கா. சிவத்தம்பியின் மணி விழா இன்று கொண்டாடப்படுகிறது.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் இன்று பி. ப. 3 மணிக்கு மணிவிழா நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்.

பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் [நந்தி] விழாவுக்குத் தலைமை வகிப்பார்.

யாழ். பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா தொடக்க உரை நிகழ்த்தி, பேராசிரியர் சிவத்தம்பிக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பார்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள், வண. நி. ஏ. பிரான்சிஸ் அடிகளார், சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் ஆசியுரை வழங்குவர்.

வித்துவான் க. சொக்கலிங்கம், திரு. எஸ். ரி. அரசு, திரு. டொமினிக் ஜீவா, கலாநிதி எஸ். ஜெபநேசன், கவிஞர் புதுவை இரத்தினதுரை, திரு. சு. டிவகலாலா, திரு. இ. ஜெயராஜ் ஆகியோர் வாழ்த்துரைகள் வழங்குவர். [அ]

## 3 கிரனேட்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஸார் அவரை துரத்திச் சென்றனர். வீடு ஒன்றினுள் ஒளிந்து கொண்ட அவர் அங்கிருந்தவாறு பொலீஸார் மீது மற்றுமொரு கிரனேட்டை வீசித்தாக்கினார்.

அதனைத் தொடர்ந்து பொலீஸார் வாடி வீடு முகாமில் உள்ள இராணுவத்தினரை உதவிக்கு அழைத்தனர்.

மூன்று கவச வாகனங்களுடன் வந்த இராணுவத்தினர் அந்த வீட்டை சுற்றி வளைத்தனர்.

லெப்டினன்ட் பிரபாகரன் தன்னிடமிருந்த கடைசி கிரனேட்டையும் அவர்கள் மீது வீசிவிட்டு, இறுதியில் சயனைட் உட்கொண்டு வீரமரணமடைந்தார் என்று விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஓ-3)

# மரண அறிவித்தல்

## அன்னலட்சுமி [மாமி]

துண்டி வீதியில் வசிக்கும் வீரசிங்கத்தின் அன்புச்சகோதரி அன்னலட்சுமி காலமாகிவிட்டார். இவர் காந்திமதியின் அன்பு மைத்துனியும், பிறேமராணி, ரவீந்திரன், விமலராணி, விஜயராணி, புஸ்பாகரன், செல்வராணி, விஜேந்திரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார் அன்னாரின் பூதவுடல் தகனக் கிரியைக்காக அன்னாரின் இல்லத்திலிருந்து [10-5-92] இன்று பிற்பகல் 3 மணியளவில் துண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவுசெய்து ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
ந. வீரசிங்கம், சி. சிவலிங்கம்

1009, துண்டி வீதி,
கொழும்புத்துறை.

[20936]

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி [illegible] இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 10-5-1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org